# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# நான்காம் பத்து

## இரண்டாம் திருமொழி - கம்பமா
## திருநாங்கூர்த் திருப்பதி 11
## 5. திருவண்புருடோத்தமம்

** கம்ப மாகடல் அடைத்து இலங்கைக்கு மன் * கதிர் முடி அவை பத்தும்
அம்பினால் அறுத்து * அரசு அவன் தம்பிக்கு * அளித்தவன் உறை கோயில் **
செம்பலா நிரை செண்பகம் மாதவி * சூதகம் வாழைகள் சூழ் *
வம்புலாம் கமுகு ஓங்கிய நாங்கூர் * வண்புருடோத்தமமே 1

பல்லவம் திகழ் பூங்கடம்பு ஏறி * அக்காளியன் பணவரங்கில் *
ஒல்லை வந்துறப் பாய்ந்து அருநடம் செய்த * உம்பர் கோன் உறை கோயில் **
நல்ல வெந்தழல் மூன்று நால்வேதம் * ஐவேள்வியோடு ஆறங்கம் *
வல்ல அந்தணர் மல்கிய நாங்கூர் * வண்புருடோத்தமமே 2

அண்டர் ஆனவர் வானவர் கோனுக்கு என்று * அமைத்த சோறது எல்லாம்
உண்டு * கோநிரை மேய்த்து அவை காத்தவன் * உகந்து இனிதுறை கோயில் **
கொண்டலார் முழவில் குளிர் வார் பொழில் * குல மயில் நடம் ஆட *
வண்டு தான் இசை பாடிடு நாங்கூர் * வண்புருடோத்தமமே 3

பருங்கை யானையின் கொம்பினைப் பறித்து * அதன் பாகனைச் சாடிப் புக்கு *
ஒறுங்க மல்லரைக் கொன்று * பின் கஞ்சனை உதைத்தவன் உறை கோயில் **
கரும்பினூடு உயர் சாலிகள் விளை தரு * கழனியில் மலி வாவி *
மருங்கெலாம் பொழில் ஓங்கிய நாங்கூர் * வண்புருடோத்தமமே 4

சாடு போய் விழத் தாள் நிமிர்த்து * ஈசன் தன் படையொடும் கிளையோடும்
ஓட * வாணனை ஆயிரம் தோள்களும் * துணித்தவன் உறை கோயில் **
ஆடு வான் கொடி அகல் விசும்பு அணவிப் போய்ப் * பகலவன் ஒளி மறைக்கும் *
மாட மாளிகை சூழ் தரு நாங்கூர் * வண்புருடோத்தமமே 5

அங்கையால் அடி மூன்று நீர் ஏற்று * அயன் அலர் கொடு தொழுது ஏத்த *
கங்கை போதரக் கால் நிமிர்த்து அருளிய * கண்ணன் வந்துறை கோயில் **
கொங்கை கோங்கு அவை காட்ட வாய் குமுதங்கள் காட்ட * மா பதுமங்கள் *
மங்கைமார் முகம் காட்டிடு நாங்கூர் * வண்புருடோத்தமமே 6

உளைய ஒண்திறல் பொன்பெயரோன் தனது * உரம் பிளந்து உதிரத்தை
அளையும் * வெஞ்சினத்து அரி பரி கீறிய * அப்பன் வந்துறை கோயில் **
இளைய மங்கையர் இணையடிச் சிலம்பினோடு * எழில் கொள் பந்து அடிப்போர் * கை
வளையில் நின்று ஒலி மல்கிய நாங்கூர் * வண்புருடோத்தமமே 7

வாளையார் தடங்கண் உமை பங்கன் * வன் சாபம் மற்றது நீங்க *
மூளையார் சிரத்து ஐயம் முன்னளித்த * எம் முகில் வண்ணன் உறை கோயில் **
பாளை வான்கமுகூடு உயர் தெங்கின் * வன்பழம் விழ வெருவிப் போய் *
வாளை பாய் தடம் சூழ் தரு நாங்கூர் * வண்புருடோத்தமமே 8

இந்து வார் சடை ஈசனைப் பயந்த * நான்முகனை தன் எழிலாரும் *
உந்தி மாமலர் மீமிசைப் படைத்தவன் * உகந்து இனிதுறை கோயில் **
குந்தி வாழையின் கொழுங்கனி நுகர்ந்து * தன் குருளையைத் தழுவிப் போய் *
மந்தி மாம்பணை மேல் வைகு நாங்கூர் * வண்புருடோத்தமமே 9

** மண்ணுள் ஆர் புகழ் வேதியர் நாங்கூர் * வண்புருடோத்தமத்துள் *
அண்ணல் சேவடிக் கீழ் அடைந்து உய்ந்தவன் * ஆலிமன் அருள்மாரி **
பண்ணுள் ஆர் தரப் பாடிய பாடல் * இப்பத்தும் வல்லார் * உலகில்
எண்ணிலாத பேரின்பம் உற்று * இமையவரோடும் கூடுவரே 10

**அடிவரவு:** கம்பம் பல்லவம் அண்டர் பருங்கை சாடு அங்கையால் உளைய வாளை இந்து மண்ணுளார் பேரணிந்து

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---